திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: திரு.சி.சுவாமிமுத்தழகன்.,எம்.ஏ.,எம்.ஏ.,எம்.எட்.,எம்.பில்.,

ந.க.எண்.8228/அ1/2024 நாள்: .10.2024

பொருள்: பள்ளிக்கல்வி - அமைச்சுப்பணி – திருவண்ணாமலை மாவட்டம் – கீழ்புத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளி, இளநிலை உதவியாளர் திரு.ரா.முருகவேல் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 06.11.2023 முற்பகல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்க கோருதல் – சார்பு.

பார்வை: 1. திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 6402/அ1/2023 நாள்:04.11.2023

2. செய்யாறு மாவட்டக் கல்வி அலுவலரின் (இடைநிலை) கடிதம் ந.க.எண். 2355/அ1/2024 நாள்:24.07.2024

..............

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்புத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.ரா.முருகவேல் என்பாருக்கு பார்வை (1) காணும் திருவண்ணாமலை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகளின்படி, இளநிலை உதவியாளராக பதவி உயர்வு அளிக்கப்பட்டு 06.11.2023 முற்பகல் முதல் தொடர்ந்து பணிபுரிந்து வருவதை தொடர்ந்து இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன் முறை செய்து ஆணை வேண்டிய கருத்துவினை பார்வை (2) இல் காணும் செய்யாறு மாவட்டக் கல்வி அலுவலரால் (இடைநிலை) பரிந்துரை செய்து இவ்வலுவலகம் பெறப்பட்டுள்ளது.

செய்யாறு மாவட்டக் கல்வி அலுவலரால் (இடைநிலை) பரிந்துரையின் அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ்வரும் இளநிலை உதவியாளர் பதவியில் 06.11.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்தும், பணிவரன்முறைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டுகாலம் தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்யவேண்டுமென்று ஆணையிடப்படுகிறது.

மேற்காண் பொருள் சார்ந்து சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியருக்கு தெரிவிக்கலாகிறது.

இணைப்பு: அசல் பணிப்பதிவேடு

26/10/24

முதன்மைக்கல்வி அலுவலர்,

திருவண்ணாமலை.

26/10/24

பெறுநர்

மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலை) செய்யாறு.

நகல்

1. தலைமையாசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, கீழ்புத்தூர்.
2. சம்பந்தப்பட்ட பணியாளர் (தலைமையாசிரியர் மூலமாக)